மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23-ம் நாள் திங்கட்கிழமை

அ.வ.எண். 142/21

பி.சா.2

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர்: கோபால் | தேதி : 23.02.26 |
| வயது : | த/பெ : ராமசாமி |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

---

23.02.26 குறுக்கு விசாரணை

1.ஈஸ்வரனுக்கும், ஹரிஹரபுத்திரனுக்கும் இடையில் நடந்த பாகப்பிரிவினையில் வழக்கு சொத்துக்களில் ஆளுக்கு பாதியாக 15 செண்ட் வீதம் பிரித்து கொண்டதாக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஈஸ்வரனுக்கு பரிபூரணம் என்ற பெயரில் எந்த மகளும் கிடையாது என்றால் சரியல்ல. தங்கம்மாள் என்ற மகளைதான் நான் தவறுதலாக பரிபூரணம் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2.ஈஸ்வரன் ஆயுளுக்கு பின் அவரது மனைவி சுந்தரம்மாள் மற்றும் ஈஸ்வரனின் மற்ற வரிசுகளுக்கு இடையில் ஊர் பெரியவர்களான நான், சண்முகம் முன்னிலையில் வாய்மொழியாக பாகபிரிவினை செய்து கொண்டதாக நான் சொல்லுவது பொய் என்றால் சரியல்ல. ஸ்ரீமூலக்கரை கிராமத்தில் உள்ள புல எண் 70 ல் கண்ட சொத்துக்ளை ஈஸ்வரனின் பெண்மக்கள்

ஆண்மக்களுக்கு வாய்மொழியாக விட்டு கொடுத்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

3.பரிபூரணத்திற்கோ, அவரது தகப்பனார் ஹரிஹரபுத்திரனுக்கோ வழக்கு சொத்தில் எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. பரிபூரணம், செல்லத்துரைக்கு கிரையம் கொடுக்க கிரைய ஒப்பந்தம் செய்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. தபசில் சொத்தான புல எண் 71/1ல் உள்ள 30 செண்ட் முழுவதையும் செல்லத்துரை அனுபவித்து வந்ததாக நான் சொல்லுவது பொய் என்றால் சரியல்ல. செல்லத்துரை 1ம் பிரதிவாதிக்கு ஏற்பாடு ஆவணம் எழுதிக்கொடுக்க எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

4.ஈஸ்வரனுக்கு பாத்தியப்பட்ட வழக்கு சொத்தினை பொறுத்து அவரது வாரிசுகளுக்கிடையில் எந்த பாகபிரிவினையும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. ஈஸ்வரனுக்கு பாத்தியப்பட்ட அனைத்து சொத்துக்களையும் இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்று நான் சொல்லுவது பொய் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.